**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்: 526** **நாள்: 30.09.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் "பெண்கள் பாதுகாப்பு மற்றும் பாலின நீதி மாநாடு 2026" மாண்புமிகு சமூக நீதித்துறை அமைச்சர் திரு.வன்னி அரசு அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகம் (Gender & Policy Lab - GPL), பெண்கள் பாதுகாப்பு பாலின நீதி கூட்டியக்கம் அமைப்புடன் இணைந்து, இன்று (30.09.2026) ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள அம்மா மாளிகைக் கூட்டரங்கில் நடைபெற்ற "பெண்கள் பாதுகாப்பு மற்றும் பாலின நீதி மாநாடு 2026"ல் மாண்புமிகு சமூக நீதித்துறை அமைச்சர் திரு.வன்னி அரசு அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில், மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., அவர்கள், பெண்கள் பாதுகாப்பு பாலின நீதி கூட்டியக்கத்தின் ஆலோசகர் பேராசிரியர் சரசுவதி, திருமதி கீதா உள்ளிட்ட நிர்வாகிகள், சிங்கப்பெண்ணே சிறப்புப் படை காவல் ஆய்வாளர், மாநகராட்சி பாலின மற்றும் கொள்கை ஆய்வகத்தின் குழுத் தலைவர் முனைவர் லெஜிஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டில் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவிகளின் பாதுகாப்பு மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறை; பெண்கள் அமைப்புகளின் பார்வையில் பெண்கள் பாதுகாப்பு; மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கையரின் பாதுகாப்பு, உரிமைகள் மற்றும் உள்ளடக்கம்; அமைப்பு சார்ந்த துறையில் பணிபுரியும் பெண்களின் பாதுகாப்பு மற்றும் அமைப்பு சாரா துறையில் பணிபுரியும் பெண்களின் பாதுகாப்பு ஆகிய முக்கிய அம்சங்களை உள்ளடக்கிய ஐந்து கருப்பொருள் சார்ந்த அமர்வுகள் விவாதிக்கப்பட்டது.

"பெண்கள் பாதுகாப்பு, பாலின நீதி மற்றும் பாலினப் பொறுப்புணர்வு கொண்ட கொள்கை" என்ற தலைப்பில் நடைபெற்ற இம்மாநாடு, பெண்கள் பாதுகாப்பு, பாலின நீதி, சமத்துவம், உரிமைகள் மற்றும் பாலினப் பொறுப்புணர்வு கொண்ட கொள்கை உருவாக்கம் தொடர்பான முக்கியப் பிரச்சினைகள் குறித்து கட்டமைக்கப்பட்ட கலந்துரையாடல் மற்றும் பல்வேறு தரப்பினரின் பங்கேற்பை ஏற்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்டது. இம்மாநாட்டில் பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள், பெண்கள் உரிமை ஆர்வலர்கள், மாணவர்கள், அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா துறைகளில் பணிபுரியும் பெண்கள், திருநங்கையர், சமூகப் பணியாளர்கள், குழந்தைகள் உரிமை ஆர்வலர்கள், மனித உரிமைப் பாதுகாவலர்கள் மற்றும் பிற பங்குதாரர்கள் என பல்வேறு தரப்புகளைச் சேர்ந்த சுமார் 450 பேர் பங்கேற்றனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**